செ.வெ.எண். 264/செமதொஅ/ 2009 நாள்: 24.08.2009.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவினர் 25.08.2009 அன்று காஞ்சிபுரம் வருகை

காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மனுக்கள் குழு அதன் தலைவர் திரு. கோவை தங்கம் அவர்கள் தலைமையில் செவ்வாய் கிழமை (25.08.2009) அன்று வருகை தர உள்ளது. இக்குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.உதயம் சண்முகம், திரு.செ.புஷ்பராஜ், திரு.வே.கண்ணன், திரு.ந.சுப்ரமணியன், திரு.கே.பி.அன்பழகன், டாக்டர் எம்.கே.விஷ்ணு பிரசாத், டாக்டர். இ.எஸ்.எஸ்.ராமன், டாக்டர்.க.நெடுஞ்செழியன், திரு.க.டில்லி பாபு, திரு.சு.குணசேகரன், சட்டமன்றப் பேரவை செயலாளர் திரு.மா.செல்வராஜ், குழு அலுவலர் திருமதி.கோ.காயத்ரி தேவி, சார்பு செயலர் திரு.ந.முருகானந்தம் ஆகியோர் குழுவுடன் வருகை தர உள்ளார்கள். இக்குழுவினர் அன்று மாலை 03.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட ஊராட்சி அலுவலக கூட்ட அரங்கில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தற்போது பெறப்பட்ட மனுக்கள் மீது ஆய்வு செய்ய உள்ளார்கள். மேலும் 07.11.2006 அன்று நடைபெற்ற மனுக்கள் குழுவின் கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களின் மீது சம்மந்தப்பட்ட துறைகள் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மறு ஆய்வு செய்ய உள்ளார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.